**செய்தி வெளியீடு எண்–608** **நாள்– 26.7.2008**

# செய்தி வெளியீடு

25.7.2008 அன்று பெங்களூரு மாநகரத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் தலைமைச் செயலர் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில் சிறப்புச் சட்ட ஒழுங்கு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நீர்த் தேக்கங்கள், மின் நிலையங்கள், அணு உலைகள், போன்ற மிக இன்றியமையாத அமைப்புகளுக்கு 24 மணி நேர பாதுகாப்பு வழங்கவும், மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள வழிபாட்டுத் தலங்கள், விமான நிலையம், புகை வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், கடற்கரை, கேளிக்கை மற்றும் பொது பூங்காக்கள் போன்ற இடங்களில் விழிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தி கூடுதல் பாதுகாப்பு அளிக்கவும், வாகனத் தணிக்கைகளைத் தீவிரபடுத்தவும், தகவல் தொழிற்நுட்ப நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பி.பி.ஒ மையங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கவும், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் போன்ற கல்வி நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், வழக்கமாக குற்றம் புரிவோர், குற்றப் பட்டியலில் உள்ளோர், தீவிரவாத மற்றும் அடிப்படைவாதிகள், சமூக விரோதிகள் ஆகியோர் மீதான கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும், தக்க முன்னெச்சரிக்கை நடிவடிக்கை எடுக்கவும், அனுமதியின்றி தங்கியிருக்கும் சந்தேகத்திற்குரிய அயல் நாட்டவர்கள் மீது கண்காணிப்பு நடவடிக்கை எடுக்குமாறும் காவல் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அத்துடன் வெடி மருந்து கிடங்குகளை உடனடியாகத் தணிக்கை செய்து அவைகளைச் சட்ட விரோதமான செயல்களுக்கு பயன்படுத்தாத வகையில் தீவிரமாகக் கண்காணித்து தடுப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

.....

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.